சூத்திரம்
www.sooddram.com
The Formula



~~ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அறுதிப் பெரும்பான்மை பெற்றது! ஜனநாயக~~

சூத்திரம்
முதற்பக்கம்
FONTS/எழுத்துரு
சர்வதேச நேரம்
தொடர்புகளுக்கு
கட்டுரைகள்
பொதுவிடயம்
அரசியல் சமூக ஆய்வு
இலங்கைத் தமிழர் போராட்டம்
இலங்கையில் உள்ள ஏனைய அரசியல் அமைப்புகள்
சர்வ தேச அரசியல்
அரசியல் தீர்வு
கவிதைகள்
சமூக விழிப்பு
போராட்டம்
பொது விடயம்
புகைப்படங்கள்
எமது வாழ் நிலங்கள்
போராட்டங்கள்
போராட்ட தடயங்கள்
இணையத்தளங்கள்
கண்ணோட்டம்
பூந்தளிர்
தூ
தேனி

# 1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்......

## *நடந்த வன்கொடுமைகள்! (பகுதி 3)*

வவுனிக்குளம் சிவபுரத்திலிருந்து புறப்பட்ட லொறி இரவு 20 நிமிடங்கள் வரை பயணித்து ஓர் இடத்தில நிறுத்தப்பட்டது. எங்களை இறங்கும்படி பணித்தனர் அட்டைகள். இறங்கினோம். கட்டப்பட்ட கண்கள் கழற்றப்பட்டன. எங்கும் வெளிச்சமாக இருந்தது. இந்த இடம் துணுக்காய் என்றனர், அட்டைகள் நடத்திவரும் வதைமுகாம் இதுதான் என்றனர் என்னுடன் விலங்கிடப்பட்டிருந்தவர்கள். இறங்கிய எங்களை ஓர் பழைய அரிசி மில் ஒன்றினுள் அழைத்துச் சென்றனர். அங்கே ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தரையில் படுத்திருந்தனர். அவர்களது கால்களில் சங்கிலிகள் மாட்டப்பட்டிருந்தன. இருவர் ஒரு சங்கிலியில் மாட்டப்பட்டிருந்தனர். எங்களது கால் சங்கிலியை கழற்றினர். இருவர் இருவராக நிற்கச் சொல்லி ஒரு சங்கிலியில் இருவரை இணைத்தனர். பின்னர் இவர்களுடன் படுத்துக்கொள்ளும்படி கூறினர். நாளை வருகிறோம் என்று கூறிச் சென்றனர்.

காலை 5.50 மணிக்கு எழுந்து காலைக் கடனுக்கு செல்லும்படி பணித்தனர். நாம் இரண்டு பேர் ஒரு சங்கிலியில் இணைக்கப்பட்டிருந்தோம். அப்படியே சென்று கடனைக் கழித்துவிட்டு வரும்படி கூறினர். அங்கே இருந்த அத்தனை பேரும் இவ்விதம் பிணையப்பட்டு இருந்தனர். பலர் மெலிந்து நோய்வாய்ப்பட்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

என்னுடன் விஜயன் என்ற இளைஞர் பிணைக்கப்பட்டிருந்தார். இவர் டெலொ

**உனக்கு நாடு இல்லை என்றவனைவிட நமக்கு நாடே இல்லை என்றவனால்தான் நான் எனது நாட்டை விட்டு விரட்டப்பட்டேன்.......**



ராஜினி திரணகம
MBBS(Srilanka)
Phd(Liverpool, UK)

**"அதிர்ச்சி ஏற்படுத்தும் சாமர்த்தியம் விடுதலைப்புலிகளின் வலிமை மிகுந்த ஆயுதமாகும்.** விடுதலைப்புலிகளுடன் நட்பு பூணுவது என்பது வினோதமான சுய தம்பட்டம் அடிக்கும் விவகாரமே. விடுதலைப்புலிகளின் அழைப்பிற்கு உடனே செவிமடுத்து, மாதக்கணக்கில்

ஈழச் சுவர்
தமிழ் நியூஸ் வெப்
பத்மநாபா
மலையகம்
பார்வை
அலை
தாயகம்
ஈழநாசம்
நெருப்பு
அதிரடி
அதிரடி மீடியா
ஈ.பி.ஆர்.எல்.எவ்.
ஆனந்தசங்கரி
விழிப்பு
ரெலோ நியூஸ்
உதயம்
தேனகம்
புளொட்
ஈபிஆர்எல்எவ் வெப்
விடிவெள்ளி
எங்கள் பூமி
இலங்கை கம்யூனிஸ்ட்
எங்களைப்பற்றி
General

இயக்கத்தைச் சேர்ந்தவர். நாம் இருவரும் காலைக் கடனைக் கழிக்கச் சென்றோம். 15அடி ஆழம் கொண்டதும் முப்பது அடி நீளம் கொண்டதாகவும் அமைந்த குழியின் மேல் மரங்கள் போடப்பட்டு அதன் குறுக்கே பலகைகளைப் போட்டிருந்தனர். பலகைகளின் இடையே அரையடி அளவு இடைவெளியிருக்கும், அதன் ஊடாக நாம் மலம் கழிக்க வேண்டும். வாழ்வின் முதல் தடவை கைதியாக நாசி ஜேர்மனியரின் வதை முகாம் காட்சிகளைக் நேராகக் கண்டேன் அங்கே!

இருவர் இருவராக பிணைக்கப்பட்ட மாடுகள் போன்று வரிசையாக நடந்து சென்று மலம் கழிக்கும் மையத்தை அடைந்தோம். அருகில் இன்னொருவர் நெருக்கமாக இருக்கும் போது எப்படி காலைக் கடனை முடிப்பது. விஜயன் தனது கடனை முடித்தார். நான் சிறுநீர் மட்டும் கழித்துவிட்டு சுற்றும் முற்றும் பார்த்தேன். எங்களது அரிசி மில் போன்ற வேறொரு அரிசி மில்லில் இதே போன்று பல பேர் சங்கிலியால் பிணைக்கப்பட்டு காலைக் கடன் கழிக்க வரிசையாகச் சென்று கொண்டிருந்தனர்.

காலையில் தண்ணீர், தேனீர், உணவு எதுவும் கிடையாது. கொட்டடிக்குள் மீண்டும் வந்ததும் யாருடனும் கதைக்கக் கூடாது, நிலத்தில் கீழே பார்த்துக்கொண்டு அமர்ந்திருக்கும்படி உத்தரவிட்டனர் அட்டைகள். காலை 8.30 மணியளவில் “சலிம்” என்ற செம்பாட்டு சலீம் அல்லது சேர்லி அம்மான் என்ற குள்ளமான அட்டை (புலி) வந்தார். தலை மயிர் செம்பாட்டு நிறத்தில் இருந்தது.

நேற்று இரவு இங்க வந்த எல்லாரையும் வெளியில வரச் சொல்லு என்று சத்தமாகச் சொன்னார். சில அட்டைகள் உள்ளே வந்து இரவு வந்த எல்லாரும் வாங்கடா வெளியில் என்றனர். நாம் அனைவரும் (150 பேர்) வெளியில் வந்தோம். செம்படை தலை அட்டை அங்கே நின்று கொண்டு எங்களை நோக்கி அறிவுரை வழங்கினார்.

நீங்கள் இங்கு வந்திருப்பது விசாரணைக்காக, விசாரணை முடிந்ததும் நீங்கள் விடுவிக்கப்படுவீர்கள். விசாரணை முடியும் வரை நீங்கள் இங்கேதான் இருக்க வேண்டும். விசாரணை செய்யும் எங்களுக்கு நீங்கள் ஒத்துழைப்பு தரவேண்டும். நீங்கள் இருந்த இடத்துக்கு திரும்பிச் சென்று இருக்கவும் என்று கூறி அவரது அறிவுரையை முடித்தார்.

இவர் தனது அறிவுரையை முடித்துவிட்டு விசாரணைப் பகுதிக்குச் சென்றார். விசாரணைப் பகுதி எங்கள் இருப்பிடத்திலிருந்து சுமார் 20 அடிகள் தள்ளி இருந்தது. இந்த அட்டை அங்கே சென்றதும் இளைஞர்கள் அலறும் சத்தம் கேட்கத் தொடங்கியது. அம்மா, ஐய்யோ என்ற இரண்டு வார்த்தைகளும் தொடர்ந்து அபயக் குரலுடன்

அவர்களின் குழுக்களில் இருந்து ஆலோசனை வழங்கி, கடிதங்கள் வரைந்து, கூட்டங்களில் பேசித்திரிந்து, அவர்களுக்கு அடிவருடிகளாக இருந்தவர்கள்மீது கூட சூசகமான எச்சரிக்கைகள், காலப்போக்கில் அவர்கள்மீது சந்தேகம் கொண்டு விடப்பட்டன………”

(முறிந்த பனை நூலில் இருந்து)

(இந் நூலை எழுதிய ராஜினி திரணகம விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் முக்கிய உறுப்பினரான பொஸ்கோ என்பவரால் 21-9-1989 அன்று யாழ் பல்கலைக்கழக வாசலில் வைத்து சுட்டு கொல்லப்பட்டார்)

Its capacity to shock was one of theL.T.T.E’smost potent weapons. Friendship with theL.T.T.E. was a strange and self-flattering affair.In the course of the coming days dire hints were dropped for the benefit of several old friends who had for months sat on committees, given advice, drafted latters, addressed meetings and had placed themselves at the L.T.T.E.’s beck and call.

From: Broken Palmyra

*இலங்கையின் 7 வது பாராளுமன்றத் தேர்தல்!*
நடக்கும் என்றார் நடந்து விட்டது! நடக்காது என்றார் இனி நடந்துவிடுமா?

ஒலித்துக் கொண்டே இருந்தது.

இந்த ஓநாய்கள் எங்கள் இளைஞர்களை வதைக்கிறார்கள், யாராக இருந்தாலும் மனித நேயம் என்பது இயற்கையாக இருக்க வேண்டியது மனிதனுக்கு. இந்த அட்டைகளுக்கு இதயம் என்ற ஒன்றே இருந்ததாகத் தெரியவில்லை. தமிழனை இவ்வளவு அரக்கனாகவா இறைவன் படைத்தான். இளைஞரது அலறும் சத்தம் ஒரு மனிதனால் கேட்கமுடியாததாக இருந்தது. நான் தாக்கப்படும் போது ஏற்பட்ட வலியை விட இந்த இளைஞர்கள் தாக்கப்படும் போது அவர்கள் எழுப்பும் அவலக் குரல் மிருகங்களையும் இரங்கவைக்கும். முதலில் “ஆண்டவரே இவர்களை மன்னித்துவிடும்” என்று கோரிக்கை வைத்த நான் இப்போது, “ஆண்டவரே இவர்களை மன்னிக்காதீர்” என்ற கோரிக்கையை வைத்தேன்.

காலை 9மணியளவில் “தீபன்” என்ற ஒரு அட்டை உள்ள வந்தது. விசாரணைக்கான நபர்களைத் தேர்ந்து கைதிகளாகிய எங்களை இந்த நபர்தான் அவர்களிடத்து அனுப்பிவைப்பார். உள்ளே வந்த இந்த அட்டை புதிதாக வந்த எங்களுக்கு கைதி இலக்கம் வழங்கப் போவதாகக் கூறி ஓர் கதிரையில் அமர்ந்தார். நாங்கள் வரிசையாக நடந்து அவர் முன் ஆஜர் ஆனோம். அவர் ஒவ்வொருவருக்கும் இலக்கங்களை வழங்கினார். எனக்கு வழங்கப்பட்ட இலக்கம் K. 87 இந்த அட்டைகளின் சிறை நிர்வாகத்தில் A முதல் Z வரை ஒவ்வொரு எழுத்துக்கும் 100 பேர் வீதம் இருக்கும்.

இலக்கத்தைப் பெற்றுக் கொண்டு மீண்டும் அந்த மில்லுக்குள் சென்று நிலத்தில் அமர்ந்தேன். மறுபடியும் உள்ளே வந்த தீபன் அட்டை கைதிகள் இருக்கும் நிலத்தில் இரண்டடி அகலம் இரண்டடி நீளத்தில் பெட்டி போன்ற வடிவத்தில் நீல நிறத்தில் கோடுகள் வரையும் படி உத்தரவிட்டார்.

சில மணி நேரங்களில் வண்ணப் பெயிண்ட் வந்தது. நான்கு கைதிகளை அழைத்து கோடுகளை வரையச் சொன்னார். சதுரங்க அட்டை போல இருந்தது அந்தக் கோடுகள். இந்த 2X2 அளவில் உள்ள கோடுகளுக்கு நடுவில் கைதிகள் அமர்ந்திருக்க வேண்டும். ஒருவருடன் ஒருவர் கதைக்கக் கூடாது. கால்களை நீட்டக் கூடாது. நிமிர்ந்து சப்பாணி போட்டபடி அமர்ந்திருக்க வேண்டும். இப்படி ஓர் உத்தரவு போட்டார் தீபன் அட்டை!

நாம் இருவர் இருவராக பிணைக்கப்பட்டிருந்தோம். அதனை நீக்கிவிட்டு தனித் தனியாக சங்கிலி கொண்டு இரண்டு கால்களையும் இரு முனைகளாலும் சுற்றி எலக்ரிக் வெல்டிங் செய்தனர். இரண்டு கால்களுக்கும் இடையில் உள்ள சங்கிலியின் நீளம் ஒன்றேகால் அடி இருந்தது. எலக்ரிக் வெல்டிங் செய்யும் போது எனது காலில் வெப்பம் தாக்கியது. நெருப்பு பொறி முகத்தில்


(சாகரன்)

**வெல்லப்போவது யார்....? பாராளுமன்றத் தேர்தல் 2010**

(சாகரன்)

***பாராளுமன்றத் தேர்தல் 2010***

**தேர்தல் விஞ்ஞாபனம்**

***- பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி***

1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்......

*நடந்த வன்கொடுமைகள்!*
(கிறேசியன், நாவாந்துறை)

***சமரனின் ஒரு கைதியின் வரலாறு***

***“ஆயுதங்கள் மேல் காதல் கொண்ட மனநோயாளிகள்.”***
**வெகு விரைவில்...**

**மீசை வைச்ச சிங்களவனும் ஆசை வைச்ச தமிழனும்**

(சாகரன்)

***இலங்கையில்***

**‘இராணுவ’ ஆட்சி வேண்டி நிற்கும் மேற்குலகம், துணை செய்யக் காத்திருக்கும் சரத் பொன்சேகா கூட்டம்**

(சாகரன்)

***ஜனாதிபதி தேர்தல்***

**எமது தெரிவு எவ்வாறு அமைய வேண்டும்?**

-பத்மநாபா ஈபிஆர்எல்எவ்

***ஜனாதிபதித் தேர்தல்***

சிதறி விழுந்தது. நாங்கள் நடமாட முடியாத மிருகங்கள் ஆக்கப்பட்டோம். எங்கள் சேட்டுகளைக் கழற்றச் சொன்னார்கள். இனிமேல் கைதிகள் மேலாடை அணியக் கூடாது என்று தீபன் அட்டை சத்தமிட்டுக் கூறினார்.

சேட்டைக் கழற்றச் சொன்னதும் நான் மிகவும் பயந்தேவிட்டேன். சில வேளை எங்கள் பகுதியில் மாடுகளுக்கு அடையாளங்களாக பெயர் அல்லது இலக்கத்தினை நெருப்புக் கம்பிகளால் சூடுவைத்து அடையாளம் இடுவார்கள். அப்படித்தான் இந்த கயவர்கள் செய்யப் போகிறார்களோ என்று மிரண்டு போயிருந்தேன்! நல்லவேளையாக அப்படி சூடு போடவில்லை. அப்படி ஓர் அடையாளம் இடும் முறை ஈழத்தில் இருப்பது தீபன் என்ற அந்த அட்டைக்கு ஞாபகம் வராமல் விட்டதற்கு நான் இறைவனுக்கு நன்றி சொல்லிக் கொண்டேன் மனதுக்குள்.

முதல்நாள் காலை முதல் இரவு வரை நான் அவர்கள் வரைந்த கோடுகளுக்குள் நடுவில் இருந்தேன். கால்கள் இரண்டும் விறைத்துவிட்டன. இவர்கள் பூட்டிய சங்கிலி விலங்கு கால்களை நெரித்து இழுத்து அண்டிக்கொண்டே இருந்தது. இரண்டு கால்களிலும் சங்கிலி பதிந்து கொப்புளங்கள் ஒரே நாளில் ஏற்பட்டுவிட்டது. மறுநாள் விடிந்ததும் காலைக் கடன் கழிக்க நடந்து செல்லக் கூடாது ஓடிச் செல்ல வேண்டும் என்று அங்கு நின்றிருந்த ஒரு அட்டை உத்தரவிட்டது. சங்கிலியால் பிணைத்திருக்கும் எம்மால் எப்படி ஓட முடியும். இரண்டு கால்களையும் அருகருகில் வைத்து துள்ளித் துள்ளிதான் சென்றேன் கழிவிடத்துக்கு சிலர் மெதுவாக வந்தனர், அவர்களுக்கு முதுகில் கட்டையால் அடித்தது அந்த அட்டை.

அன்று 11மணியளவில் அரை இறாத்தல் பாணும் ஒரு தட்டில் பருப்புக் கறியும் கொடுத்தனர். ஒரு தட்டில் இருக்கும் கறியை பாணில் தொட்டு இருவர் உண்ண வேண்டும். ஒரு பிளாஸ்ரிக் கப்பில் தண்ணீர் கொடுத்தனர். மாலை 5 மணியளவில் சோறும் பருப்பும் சோயா பீன்சும் கலந்த கறி ஒன்று கொடுத்தனர். பத்துப் பேருக்கு ஒரு பிளேட். ஒருவர் மாறி ஒருவர் உண்ண வேண்டும். பிளேட் கழுவப்படாமல் மாறி மாறிச் சாப்பிட வேண்டும். கைகழுவதற்கு அனுமதியில்லை. விரல்களை நாங்கள் நாக்கினால் நக்கி சுத்தம் செய்தோம்.

காலை மாலை இரு வேளை தவிர இடையில் எக்காரணத்தைக் கொண்டும் இயற்கை உபாதைகளைக் கழிக்க அனுமதிக்க மாட்டார்கள். மலம், சிறுநீர் இரண்டையும் அடக்கிக் கொண்டு இருக்க வேண்டும். அப்படி இடையில் மலம் சிறுநீர் வந்தால் சொப்பின் பையில் அதனை நிரப்பி வைத்திருந்து மாலையோ அல்லது காலையிலோ வெளியில் எடுத்துச் செல்ல வேண்டும்.

**ஆணை இட்ட அதிபர் 'கை', வேட்டு வைத்த ஜெனரல் 'துப்பாக்கி' ….. யார் வெல்வார்கள்?**

(சாகரன்)

**சம்பந்தரே! உங்களிடம் சில சந்தேகங்கள்.**

(சேகர்)

**அனைத்து இலங்கைத் தமிழர்களும் ஒற்றுமையான இலங்கை தமது தாயகம் என மனப்பூர்வமாக உரிமையோடு உணரும் நிலை ஏற்பட வேண்டும்.**

(அ. வரதராஜப்பெருமாள்)

***தொடரும் 60 வருடகால காட்டிக் கொடுப்பு***

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பாடம் புகட்டுவார்களா?**

(சாகரன்)

***ஜனவரி இருபத்தாறு!***

**விரும்பியோ விரும்பாமலோ இரு கட்சிகளுக்குள் ஒன்றை தமிழ் பேசும் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்…..?**

(மோகன்)

**2009 விடைபெறுகின்றது! 2010 வரவேற்கின்றது!!**

***'ஈழத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பாசிசத்தின் உதிர்வும், ஜனநாயகத்தின் எழுச்சியும்'***

(சாகரன்)

***சபாஷ் சரியான போட்டி.***

**மகிந்த ராஜபக்ஷ Vs சரத் பொன்சேகா.**

(யஹியா வாஸித்)

நான்கு நாட்கள் இப்படிக் கடந்தன. இரவு ஒரு மணியிருக்கும் ஒரு வாகனம் வந்தது. அதிலிருந்து இந்த அட்டைகள் வேட்டையாடி வந்த தமிழ் சகோதரர்கள் இறங்கினர். அப்படி வந்தவர்களில் ஒருவர் எனக்கருகில் அமர்த்தப்பட்டார். நானும் உறங்கிவிட்டேன். காலையில் எழுந்ததும் அவரை உற்றுப்பார்த்தேன். வெள்ளை நிறம், தடித்த உருவம், குறைந்த உயரம், வெறும் மேலுடன் உறங்கிக் கொண்டிருந்தார். சில இடங்களில் லேசாகக் கண்டங்கள் தெரிந்தன. நான் முதலில் இருந்த சிவபுரம் அட்டைகளைக் கடந்து தான் இவர் வந்திருப்பார் என்று நினைத்துக் கொண்டேன். மல்லி என்ற அந்த அட்டை இவரது இரத்தத்தை உறுஞ்சியிருப்பார் என்பது உறுதியானது.

அவரும் கண்விளித்து என்னைப் பார்த்தார். அவருக்கு சங்கிலி பிணைப்பு இடப்பட்டிருந்தது. கண்கள் கலங்கியபடி பரிதாபமாக என்னை நோக்கினார். உங்கள் பெயர் என்ன? என்று கேட்டேன்!

(தொடரும்…)


**கூத்தமைப்பு கூத்தாடிகளும் மாற்று தமிழ் அரசியல் தலைமைகளும்!**

(சதா. ஜீ.)

***தமிழ் பேசும் மக்களின் புதிய அரசியல் தலைமை***

**மீண்டும் திரும்பும் 35 வருடகால அரசியல் சுழற்சி! தமிழ் பேசும் மக்களுக்கு விடிவு கிட்டுமா?**

(சாகரன்)

**கப்பலோட்டிய தமிழனும், அகதி (கப்பல்) தமிழனும்**

(சாகரன்)

*சூரிச் மகாநாடு*

**(பூட்டிய) இருட்டு அறையில் கறுப்பு பூனையை தேடும் முயற்சி**

(சாகரன்)

**பிரிவோம்! சந்திப்போம்!! மீண்டும் சந்திப்போம்! பிரிவோம்!!**

(மோகன்)

***தமிழ் தேசிய கூட்டமைப்புடன் உறவு***

**பாம்புக்கு பால் வார்க்கும் பழிச் செயல்**

(சாகரன்)

**இலங்கை அரசின் முதல் கோணல் முற்றும் கோணலாக மாறும் அபாயம்**

சாகரன்

**ஈழ விடுலைப் போராட்டமும், ஊடகத்துறை தர்மமும்** - சாகரன்

***அடுத்த கட்டமான***

[*அதிகாரப்பகிர்வு முன்னேற்றமானது 13வது திருத்தத்திலிருந்து முன்னோக்கி உந்திப் பாயும் ஒரு விடயமே*]

- அ.வரதராஜப்பெருமாள்

*மலையகம் தந்த பாடம்*

[வடக்கு கிழக்கு மக்கள் கற்றுக்கொள்வார்களா?] - சாகரன்

[*ஒரு பிரளயம் கடந்து ஒரு யுகம் முடிந்தது போல் சம்பவங்கள் நடந்து முடிந்துள்ளன.!*] - அ.வரதராஜப்பெருமாள்

**அமைதி சமாதானம் ஜனநாயகம்**
www.sooddram.com